# மனுவியல் பாடம் - 1

# (Anthropology)

Anthropology என்ற சொல் Anthropos (மனிதன்) logos (வார்த்தை) என்ற கிரேக்க பதங்களிலிருந்து வந்த சொல்லாகும். ஆகவே, இதன் அர்த்தம் மனிதனைப் பற்றிய படிப்பு, Ma-Study அல்லது மனித விஞ்ஞானம் Science of mankind எனப்படும். குறிப்பாக மனித ஆரம்பம், தன்மை, நடத்தை சம்பந்தமான கல்வி என்றும் இதைக் கூறலாம். மனிதனைப் பற்றிய படிப்பில் இரண்டு பகுதிகளைக் காணலாம்.

அவையாவன,

## 1. Psysical Anthropology – உடலியல் சம்பந்தமான படிப்பு

**2.** Cultural Anthropology – வரலாறு, மொழி, இலக்கியம், கலைகள், விஞ்ஞானம், தொழில் நுட்பங்கள் உட்பட மனிதனின் சிந்தனை, செயற்பாடு உள்ளடங்கிய சகல விஷயங்களையும் இது கருத்தில் கொள்கிறது.

**3.** Theological Anthropology – வேதவியல் கூறும் மனித சம்பந்த படிப்பு, இது மனிதனுக்கும் தேவனுக்கும், உள்ள உறவைச் சித்தரிக்கிறது.

''மனிதன்'' என்பதற்குரிய எபிரேய பதம் ஆதாம் என்பதாகும். எனவே, ஆதாம் என்பது ஒரு தனி மனிதனின் சிறப்புப் பெயரன்று. இது உயிரினங்களில் மனிதர் என்ற வகையினரைக் குறிக்கும். ஏவாள் என்பதற்கு ''உயிர்'' என்பது பொருள். அவளிலிருந்தே மனுக்குலம் பெருக ஆரம்பித்தது என்று கருதப்பட்டதால் ஏவாள் என்ற பெயர் முதற் பெண்ணுக்குப் பொருத்தமாயிருந்தது.

மனிதனின் ஆரம்பத்தைக் குறித்து இரண்டு விதமான வரலாற்றை வேதாகமம் சமர்ப்பிக்கின்றது. ஒன்று, ஆதியாகமம் 1:26,27 வசனங்களிலும், மற்றது ஆதியாகமம் 2ம் அதிகாரம் 7ம் வசனத்திலும் 21–23 வசனம் வரையிலும் காணப்படுகிறது. படைப்பைக் குறித்ததான இரு வேறுபட்ட ஒழுங்கை ஆதியாகமம் 1:23 பகுதியும் ஆதியாகமம் 2:4–25 பகுதியும் கொடுக்கின்ற போதிலும், முதல் பகுதி சகல சிருஷ்டிப்புகளும் தோன்றிய ஒழுங்கைக் காண்பிக்கும்போது, இரண்டாம் பகுதி மணிமகுடமான மனிதனோடு அவை கொண்டுள்ள தொடர்பை முன் வைக்கின்றது.

**1. மனிதன் யார்?**

மனிதன் தேவனின் படைப்புகளுள் மணிமகுடமாகத் திகழ்கின்றான். (சங்.8:5–9) அது மட்டுமல்ல அவன் தேவனின் மிகவும் பெரிதான அக்கறைக்குப் பாத்திரவானாகவும் திகழ்கின்றான். ஏனெனில் அவன்:

1. அவரது சாயலில் படைக்கப்பட்டவன். (ஆதி.1:26,27; ஆதி.5:1; 9:6; யாக்.3:9; 1கொரி.11:7)

சாயல் என்பதற்குரிய எபிரேய சொல் ''செலம்'' என்பதாகும். இது 1சாமு.6:5; எண்.33:52; 2இரா.11:8; எசே.23:14 போன்ற இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் ''ஒப்பானது'' என்பதாகும். மனிதன் தேவனின் சாயலில் படைக்கப்பட்டான் என்று கூறும் போது, அவன் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியவனாக ஆக்கப்பட்டான் என்பது பொருள். இதை சரீரத் தோற்றம் என்று நாம் கருதுதல் கூடாது. ஏனெனில் தேவன் ஆவியாயிருக்கிறார் (ஏசா.40:18). ஆகவே, சாயலானது அறிவு, நீதி, பரிசுத்தம் போன்றவைகளைக் குறிப்பிடுகின்றது. (எபே.4:23,24; கொலோ.3:10)

2. தேவ திட்டத்தில் உருவானவன். (ஆதி.1:26; எபே.3:9; கொலோ.1:15–18)

3. தேவனோடு உரிமை உடையவன் அல்லது கனம் பொருந்தியவன் (ஆதி.2:7; சங்.8:5; 49:20)

4. அதிசயமானவன் (சங்.139:14)

5. அழியாத் தன்மையுடையவன் (யோவா 6:47; 1யோவா.5:11,12; 1கொரி.15:53,54)

6. சிருஷ்டிப்புக்களின் மேல் அதிகாரமுடையவன் (சங்.8:6; வெளி.5:10; எபி.2:7)

மனிதனானவன் தேவனுடைய திட்டத்தில் உருவானவன் என்பதனை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. ஏனெனில் இவ்வுலகில் வாழும் எமக்கு பக்கபலமும், வாழ்வின் ஆதாரமுமான பரிசுத்த வேதாகமத்திலே இதற்கான சான்றுகள் கொடுக்கப்பட்டுள்ளதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். சங்கீதம் 8:5,6ம் வசனங்களை உற்று நோக்குமிடத்து படைப்புகள் அனைத்திற்கும் மணிமகுடமாக மனிதன் திகழ்கின்றான். தேவன் திட்டமிட்டு அவனைச் சிருஷ்டித்தார். ஆதி 1:26ல் குறிப்பிட்டப்படி தேவன் தமது சாயலை மனிதனுக்கு கொடுத்து படைக்க வேண்டும் என்று திட்டமிட்ட பின்பு அவனை சிருஷ்டித்தார் என்பதைக் காணலாம். எபேசியர் 4:24ன் படி நீதி, பரிசுத்தம், அறிவு போன்ற அம்சங்களின் அடிப்படையில் அவன் சிருஷ்டிக்கப்படுகிறான்.

''அதிசயமாக'' படைக்கப்பட்டுள்ளான் என்று பார்க்கும் போது தாயின் கர்ப்பத்தில் அவன் உருவான முறை எம்மை வியக்க வைக்கிறது. ஒரு ஆணின் விந்தணுவும் (SEMEN) பெண்ணின் சூலில் உள்ள முட்டையும் (EGG) சேர்ந்து ஒரு மனிதனை உருவாக்குகிறது.

ஆனால் அவை இரண்டும் இணையும் முறைகள், கரு வளரும் முறைகள் யாவும் புரியாத புதிராகவேயுள்ளது.

## 2. அவன் எங்கிருந்து வந்தான்?

“தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான்.” (ஆதி.2:7) Adamah என்ற எபிரேய சொல்லின் அர்த்தம் நிலம் என்பதாகும். இச்சொல்லிலிருந்தே Adam என்ற சொல்லும் வந்தது (சங்.103:4).

மனித இனத்தின் உற்பத்தியைப் பற்றி இங்கு தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி மனிதன் தவறான எண்ணங்கள் கொள்ளாதபடிக்கு அவனுடைய உற்பத்தியை வேதாகமம் தெளிவாக வரையறுத்திருக்கிறது. தேவன் மனிதனைத் தம் சாயலாகவே படைத்தார். “CREATE” என்பதின் அர்த்தம் ஒன்றும் இல்லாதிருந்தும் உற்பத்தியானது என்பதாகும். “MADE” என்பதின் அர்த்தம் ஒன்றிலிருந்து வேறொன்று உருவாக்கப்பட்டது என்பதாகும். இதில் மறைபொருள் ஒன்றும் இல்லை. மனிதனானவன் ஏதோவொரு தாவர இனத்திலிருந்தோ, விலங்கினத்திலிருந்தோ நாளடைவில் பரிணமித்து, தற்போதுள்ள நிலைமையை அடைந்தான் என்று எண்ணுவதற்கு இடமில்லை. இவ்வகை சித்தாந்தங்கள் மூலம் நாம் கடவுளது படைப்பு வல்லமையின் மதிப்பைத் தாழ்த்திப்போடுகிறோம். தேவனே உலகத் தோற்றத்திற்குக் காரணர் என்ற எண்ணத்தோடு மனிதன் தேவனை அணுகாமலிருப்பதால், தன் உற்பத்தியைத் தானே தாழ்மை நிலைக்குத் தள்ளிக் கொள்கிறான். மேலும், தன் உற்பத்தியின் பெருமதியையும் மறுக்கின்றான். வானத்தில் நட்சத்திரங்களை அமைத்தவரும், பூமியில் அழகிய பூக்களைப் படைத்தவரும், மண்ணையும் விண்ணையும் தம் வல்லமையின் அதிசயங்களால் நிறைத்தவருமாகிய தேவன் தமது படைப்பின் முடிவுக்கு வந்தபோது தம் அழகிய படைப்புக்கள் அனைத்தையும் ஆளுவதற்கேற்ற மனிதனையும் படைக்காமல் விடவில்லை. மனித வம்ச வரலாறு பூச்சிகளிலிருந்தும், விலங்குகளிலிருந்தும் தொடங்கவில்லை என்று வேதாகமம் திட்டவட்டமாகக் கூறுகிறது. ஆதாம் மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டபோதிலும், அவன் தேவனின் புதல்வனாகவே இருந்தான்.

ஆதாம் மண்ணின் மூலப்பொருட்களால் உண்டாக்கப்பட்டான் என்ற கருத்தைக் குறித்து மக்கள் ஒரு காலத்தில் நகைத்தார்கள். ஆனால், சில ஆண்டுகளுக்கு முன்னே பேராசிரியர் ஈங்லோஷன் என்பவரின் ஆராய்ச்சியில், பூமியின் துகள் பல மூலப் பொருட்களால் ஆனது என்றும், மக்களின் உடலும் அத்தகைய மூலப் பொருட்களால் தான் உண்டாயிருக்கிறது என்றும் கண்டு பிடித்தார். மனிதன் மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டது,

தேவன் முன்பாக அவன் அற்பமானவன் என்பதையும், எவ்வித தெய்வீகத் தன்மையும் அவனில் இருப்பதாக அவன் பெருமை பாராட்ட இடமில்லாதிருப்பதையும் காட்டுகிறது.

## 3. கடவுள் மனிதனை ஏன் படைத்தார்?

கர்த்தாவே, தேவரீர் மகிமையையும், கனத்தையும், வல்லமையையும், பெற்றுக் கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர், நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாய் இருக்கின்றன என்றார்கள் (வெளி.4:11).

தூரத்திலிருந்து என் குமாரரையும், பூமியின் கடையாந்தரத்திலிருந்து என் குமாரத்திகளையும் நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து, உருவாக்கிப் படைத்தேன் (ஏசா.43:6,7). ஆகவே எல்லாவற்றையும் அவரின் மகிமைக்காக செய்ய வேண்டும். (1கொரி.10:31) ஆகவே, மனிதன் கடவுளை மகிமைப்படுத்துவதற்காகப் படைக்கப்பட்டான். அவன் மூலமாக அவர் மகிமைப்பட வேண்டுமென்பது அவரது எண்ணமாயிருந்தது.

## 4. பரிணாமம் (டார்வினின் கொள்கை)

இயற்கைத் தேர்வின் அடிப்படையில் உயிரினங்களுக்கிடையே கூர்ப்பு உண்டாகின்றது என்பதை விளக்க டார்வின் என்பவர் பெரிதும் முயன்றார் என்பது அநேகமாக சகலமும் அறிந்ததேயாகும்.

டார்வினின் கொள்கையானது இயற்கையோடு ஒத்துப் போகின்றது என்பதற்கு அதில் எந்தவித விஞ்ஞான உண்மையும் இல்லை. இது விஞ்ஞான ஆராய்ச்சியின் விளைவாக வந்த முடிவல்ல. முழுக் கற்பனையினால் வந்த உண்மையாகும் என்று பேராசிரியர் Albert Fleishman என்பவர் கூறுகின்றார். நாமும் கூட இதனை நன்கு ஆராய்வதன் மூலம் டார்வினின் கொள்கை முற்றிலும் பிழையானது என்று நிரூபிக்கலாம். இதனைப் பாடசாலையில் அப்படியே எந்தவித ஆராய்ச்சியுமில்லாமல் ஏற்றுக் கொண்டோம். ஓர் இனத்தின் பெலவீனமானவைகள் அழிந்து போக உறுதியான உயிரினங்கள் மட்டும் எஞ்சி இனப்பெருக்கத்தை செய்கின்றன என்பது இயற்கையாகவே முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும், அபிவிருத்தியையும் உண்டாக்குகின்றதாக அமைகின்றது. இதனை விளக்குவதற்கு டார்வின் எடுத்த உதாரணத்தில் சிலவற்றைப் பார்ப்போம். ஒட்டகச்சிவிங்கியின் நீண்ட கழுத்து ஓர் உதாரணமாக டார்வினால் இயற்கைத் தேர்வினை விளக்க சொல்லப்பட்டது. அதாவது,

தொடர்ச்சியான கடும் வறட்சியின் காரணமாக தாவரங்களின் கீழேயுள்ள கிளைகளில் இலை குழை அற்றுப்போகவே குட்டையான கழுத்தையுடைய ஒட்டகச் சிவிங்கிகள் செத்து மடிந்தன. இயற்கையில் தொடர்ச்சியாக பல நூற்றாண்டுகளாக ஏற்பட்ட மாற்றத்தின் விளைவாக உயரமான கிளைகளிலுள்ள இலை குழைகளைச் சாப்பிடுவதற்காக உயரமான கழுத்தையுடைய ஒட்டகச்சிவிங்கிகள் தோன்றின.

ஆண் ஒட்டகச்சிவிங்கியை விட பெண் ஒட்டகச் சிவிங்கியின் கழுத்து 24 அங்குலம் குட்டையானதாகும். எனவே, ஆண் ஒட்டகச் சிவிங்கிகள் இறப்பதற்கு முன்பாகவே பெண் ஒட்டகச்சிவிங்கிகள் இறந்திருக்க வேண்டும். இதனால், இந்த இனமே முற்றிலுமாக அழிந்திருக்க வேண்டும்.

வறட்சியான காலத்தில் குட்டிகளால் எவ்வாறு பெரிய ஒட்டகச்சிவிங்கிகளினாலேயே எட்ட முடியாத உயரத்திற்கு எட்டி இலை குழைகளை உண்ண முடிந்தன? இதனை Dr. Certrude Himmel Farh கூட வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அமெரிக்காவிலுள்ள சிறந்த பல்கலைக்கழகம் ஒன்றில் ஒரு பேராசிரியர் குதிரைகளின் கால்களில் ஏற்பட்ட மாற்றத்தை தன் வகுப்பு மாணவர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தாராம். அதாவது, நீண்ட கால்களையுடைய குதிரைகள், குட்டையான கால்களையுடைய குதிரைகளிலும் பார்க்க வேகமாக ஓடித் தப்பிச் செல்கின்றனவாம். எனவே, தொடர்ந்து உருவான சந்ததிகளில் நீண்டதும், உறுதியானதுமான கால்கள் இயற்கை தேர்வினால் உருவானது என்று கற்பித்தார். இவற்றையெல்லாம் மாணவர்கள் ஒழுங்காகக் கேட்டு தேவையானவற்றையெல்லாம் எழுதினார்கள். ஆனால், அங்கிருந்த ஒரு மாணவனுக்கு பெரிய சந்தேகம் உண்டாயிற்று. குதிரைகளுக்கு இயற்கைத் தேர்வினால் கூர்ப்பு நடைபெற்று, உறுதியானதும், நீண்டதுமான கால்கள் கிடைக்குமாயின் புலிகளுக்கும் இயற்கை தேர்வினால் அதே சமயத்தில் கூர்ப்பு நடைபெற்றிருக்க வேண்டுமே என்று எண்ணினான்.

இதுபற்றி அம்மாணவன் அந்த பேராசிரியரிடம் கேட்ட போது அப்பேராசிரியரால் ஒன்றும் கூற முடியவில்லை. British Association for the advencement of science இன் தலைவராக இருக்கும் பேராசிரியர் ஒருவர் 1921ம் ஆண்டு மார்கழி 29ம் தேதி American Association for the Advancement of Science ல் உரையாற்றும் போது புதிய கலங்கள் உருவாவதற்குரிய மூல காரணம் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை. புதிய இனங்கள் உருவானது பற்றி பிரசுரிக்கப்பட்ட போதும், அவைகளுக்கெதிராக எழுதப்பட்ட கேள்விகளுக்கு எதிர்த்து நிற்க அப்பிரசுரங்களால் கூடாமற் போயிற்று. இன்று தொடர்ந்தும் பாடசாலைகளில் இது பற்றி மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்ற போதிலும் பிரபல்யம் வாய்ந்த பல

விஞ்ஞானிகளினால் டார்வினின் கொள்கை ஒதுக்கப்படுகின்றது. டார்வின் கூட "இனங்களின் ஆரம்பம்" என்ற தன் புத்தகத்தின் இறுதியில் "இயற்கைத் தேர்வு என்பது ஓர் எண்ணமே தவிர ஆராய்ந்து அறியப்பட்ட உண்மையல்ல" என்று கூறியிருக்கிறார். இவைகளிலிருந்து இற்கைத் தேர்வு எனும் கூர்ப்பினை விளக்குவதற்கு முடியாததாகவே இருக்கின்றது என்பதனை அறிய முடிகின்றது. ஆகவே, மனிதன் குரங்கிலிருந்து வந்தவன் என்ற கூற்று பொய்யானதாகும்.

* மிருகத்தின் இரத்தத்திற்கும், மனிதனின் இரத்தத்திற்கும் வித்தியாசம் உண்டு.

* மிருகத்தின் மாமிசத்திற்கும், மனிதனின் மாமிசத்திற்கும் வித்தியாசம் உண்டு (1கொரி.15:39)

* மனிதன் மிருகங்களின் மேல் அதிகாரமுடையவன். மனிதன் குரங்கை வைத்து வித்தை காட்டுகிறான். குரங்கு மனிதனை வைத்து வித்தை காட்டுகிறதா? ஆதி.1:26,27,31; 2:19,29; சங்.8:5-8.

கேள்விகள்:

1. மனுவியல் பற்றிய உபதேசத்தில் காணப்படுகிற பிரிவுகள் யாவை?
2. மனிதன் எவ்வாறு படைக்கப்பட்டான் என்பதனையும், மனிதன் மீது தேவன் அக்கறை கொள்வதற்கான காரணங்கள் என்னென்ன என்பதனையும் கூறுக?
3. மனிதன் எங்கேயிருந்து வந்தான்? மற்றும் எதற்காக படைக்கப்பட்டான் என்பதனை சற்று விளக்கமாக கூறுக.
4. டார்வினின் பரிணாமக்கொள்கையைப் பற்றி இப்பாடத்தின் மூலமாக கற்றுக்கொண்டவைகளைக் கூறுக.